Crl.Misc.39

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II COURT, KARUR

STC No. 470/2025

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW-5<br>Defence<br>Court |

| | | |
|---|---|---|
| Name | : | மாணிக்கம் |
| Father's Name | : | ஆறுமுகம் |
| Village | : | வெள்ளியணை |
| Taluk | : | கரூர் |
| District | : | கரூர் |
| Age | : | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of (44 of 1969) of the day of 26.03.2026

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது வெள்ளியணை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வெள்ளியணை காவல் நிலையத்தில் பணிபுரிந்த உதவி ஆய்வாளர் விஜயக்குமார் என்பவர்களின் கையெழுத்து எனக்கு பரிச்சயமானது. ஆவணங்கள் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 20.04.2023 ம் தேதி 9.30 மணி அளவில்

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

வெள்ளியணை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளர் விஜயக்குமார் நிலைய பொறுப்பில் இருந்த போது கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற மருத்துவ தகவலின் படி அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த பழனியம்மாள் என்பவரிடம் இருந்து பெற்று வந்த புகார் வாக்குமூலத்தில் அடிப்படையில் நிலைய குற்ற எண் 144/2023, ச/பி. 294(பி),323 இதச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா,ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அன்றைய தினம் 10.30 மணி அளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். **அவர் மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 4 , பார்வை மகசர் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்ப்படுகிறது–** பின்பு 1 முதல் 6 வரையிலான சாட்சிகளை தனிதனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் எதிரிகளை 22.04.2023ம் தேதி காலை 11.00 மணிக்க நிலையம் ஆஜரானவர்களை கைதுக்கான காரணம் கூறி கைது செய்து தக்க இருநபர் பிணையில் விடுவித்துள்ளார். இவ்வழக்கில் காயம்பட்ட பழனியம்மாள், அங்காயம்மாள், ஞானசேகரன், ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்து விபத்து பதிவேடு மற்றும் காய்சசான்றிதழ் வழங்கிய கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவர் பூங்குழலி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

**பழனியம்மாள் விபத்து பதிவேடு அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்ப்படுகிறது– அங்காயம்மாள் விபத்து பதிவேடு மற்றும் காய்சசான்றிதழ் அ.சா.ஆ 7 மற்றும் 8 ஆக குறியீடு செய்ப்படுகிறது– ஞானசேகரன் விபத்து பதிவேடு மற்றும் காய்சசான்றிதழ் அ.சா.ஆ.9 மற்றும் 10 ஆக குறியீடு செய்ப்படுகிறது–** இவ்வழக்கில் காயம்பட்ட பழனியம்மாளுக்கு சிகிச்சை அளித்து விபத்து பதிவேடு மற்றும் காய்சசான்றிதழ் வழங்கிய கோவை KG மருத்துவமனை மருத்துவர் சேகர் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **பழனியம்மாள் விபத்து பதிவேடு மற்றும் காய்சசான்றிதழ் அ.சா.ஆ . 11 மற்றும் 12 ஆக குறியீடு செய்ப்படுகிறது–** மருத்துவர் வழங்கிய காயச்சான்றிதழில்ல பழனியம்மாளுக்க ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என காயச்சான்றிதழ் வழங்கியதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவை 294(b), 323 இதசவிலிருந்து 294(b), 323, 325 ஆக மாற்றம் செய்து அதன் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ– 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இத்துடன் உதவி ஆய்வாளர் புலன் விசாரணையை முடித்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) இந்த வழக்கின் எதிரிகளின் மீது சரிவர புலன் விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. சொன்ன நேரத்தில், சொன்ன

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

விதத்தில் எதிரிகளை கைது செய்யயும் இல்லை சான்று பொருட்களை கைப்பற்றவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**